## FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093668

1. District : Tiruppur PS: Tiruppur V&AC Year: 2020 FIR No.: 5/2020/AC/TPR Date: 24/10/2020
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Cr.Pc Sections பிரிவுகள்: 102
(ii) Act சட்டம்: P.C (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 23/10/2020 நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 15.15 hrs Time to : 18.30 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 24/10/2020 Time : 11.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) VOL III Time : 11.30 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Type செய்யப்பட்ட புகார்
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: about 10km South East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : உதவி செயற்பொறியாளர் அலுவலகம், திருப்பூர் மின் பகிர்மானவட்டம், ஊரகம். No-26, RVE Nagar. ராக்கியாபாளையம் way
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் ——

6. Complainant /Informant (a) Name : S. Rathinam (b) Father's/ Husband's Name : Saminathan
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 20/5/66 (d) Nationality : Hindu (e) Passport No. : ——
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : —— Place of Issue : ——
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Dy. Inspector Cell officer, Coimbatore (g) Address : District Collector Office, Coimbatore.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. K.R. Giri, Asst Executive Engineer, TANGEDCO, Tiruppur Electricity Distn. Circle rural / Tiruppur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் ——

**திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 5/2020/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 24.10.2020-ம் தேதி காலை 11.30 மணிக்கு திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது கோவை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தின் துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.எஸ்.இரத்தினம் அவர்கள் அலுவலகம் ஆஜராகி ஒரு டைப் செய்யப்பட்ட ஒரு புகாரினை கொடுத்தார். அதன் விபரம் வருமாறு. அனுப்புனர் திரு.S.இரத்தினம், கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுனர்.காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். ந.க.எண்.546/2020/ஐ1 நாள்.24.10.2020 ஐயா, பொருள்: திடீர் தணிக்கை – உதவி செயற்பொறியாளர் அலுவலகம், திருப்பூர் மின்பகிர்மான வட்டம் கிராமியம்/ திருப்பூர் - புகார் மனு வழங்குதல் - தொடர்பாக. நேற்று 23.10.2020-ம் தேதி காலை திருப்பூர் ராக்கியாபாளையம் பிரிவு, RVE நகர், 4 வது வீதியில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானகழகம், திருப்பூர் மின்பகிர்மானவட்டம் கிராமியம்/ திருப்பூர் என்றஅலுவலகத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர் தனக்கு கீழ் பணிபுரியும் உதவி பொறியாளர்களிடம் இருந்தும் மற்ற நபர்களிடமிருந்தும் ஆயுதபூஜையை முன்னிட்டு கையூட்டு கேட்டுப்பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் நானும் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு. C.தட்சிணாமூர்த்தி மற்றும் போலீஸ் பார்ட்டி மற்றும் திருப்பூர் மாநகர வடக்கு மகளிர் காவல் நிலைய பெண் காவலர்கள் HC 331 மகேஸ்வரி, HC 745 பங்கஜம் மற்றும் Gr.I 306 சித்ரா ஆகியோர்கள் சகிதம் மேற்படி அலுவலகத்தை நேற்று மதியம் சுமார் 15.15 மணி முதல் 18.30 மணிவரை திடீர் தணிக்கை செய்தோம்.இந்த திடீர் தணிக்கையின்போது இவ்வலுவலக உதவி செயற்பொறியாளர் திரு.K.R கிரி அவர்களிடமிருந்தும், அவரது உடைமைகளிலிருந்தும் தகுந்த முகாந்திரம் சொல்லாத பணம் ரூ.2,01,390/- (இரண்டு லட்சத்து ஒரு ஆயிரத்து முன்னூற்றி தொண்ணூறு ரூபாய்)

இருந்தது. அப்பணம் உதவி செயற்பொறியாளர் K.R கிரிக்கு அவரின் கீழ் வேலை பார்க்கும் உதவி பொறியாளர்கள் மற்றும் மற்ற நபர்களிடமிருந்து கையூட்டாக கேட்டுப்பெற்ற லஞ்ச பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. பணம் இருந்த நீல நிற துணிப்பையும் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது வணிக ஆய்வாளர் திரு M.சதாசிவம் மற்றும் வணிக உதவியாளர் திருமதி B.சித்தேஸ்வரி ஆகியவர்களிடமிருந்து இவ்வலுவலக பதிவேடுகளின் ஒப்பம் பெற்ற ஜெராக்ஸ் நகல்கள் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,01,390/-, நீல நிற துணிப்பை மற்றும் பதிவேடுகளின் ஒப்பம் பெற்ற ஜெராக்ஸ் நகல்கள் ஆகியவைகளை தங்களிடம் ஆஜர் செய்கிறேன். இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் XXXX S.இரத்தினம் 24.10.2020 மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். இணைப்பு மேற்கண்டவாறு. Sir, received the complaint with enclosures on 24.10.2020 at 11.30 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.5/2020/AC/TPR U/s 102 Cr.P.C r/w 7 of P.C (Amendment) Act 2018 ஒப்பம் xxxx C.தட்சிணாமூர்த்தி 24/10/2020 Dy.Supdt.of Police, V&AC, Tiruppur. திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னிலை :திரு.1) S. இரத்தினம், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், கோயம்புத்தூர் மாவட்டம். 2) C.தட்சிணாமூர்த்தி, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். இன்று 23.10.2020-ம் தேதி காலை திருப்பூர் ராக்கியாபாளையம் பிரிவு, RVE நகர், 4 வது வீதியில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், திருப்பூர் மின்பகிர்மான வட்டம் கிராமியம்/ திருப்பூர் என்ற அலுவலகத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர் தனக்கு கீழ் பணிபுரியும் உதவி பொறியாளர்களிடம் இருந்தும் மற்ற நபர்களிடமிருந்தும் ஆயுதபூஜையை முன்னிட்டு கையூட்டு கேட்டுப்பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.S.இரத்தினம் ஆகிய நான் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக்கண்காணிப்பாளர் திரு. C.தட்சிணாமூர்த்தி மற்றும் போலீஸ் பார்ட்டி மற்றும் திருப்பூர் மாநகர வடக்கு மகளிர் காவல் நிலைய காவலர்கள் HC 331

என்று கூறினார். அந்த பேக்கை தணிக்கை செய்ய அதில் இருந்த நீலநிற "NAVIN CONSTRUCTIONS" மற்றும் விலாசம் குறிப்பிட்டு அச்சிடப்பட்ட துணிப்பையினுள் கட்டுக்கட்டாக பணம் மொத்தம் ரூ.1,67,580/- இருந்தது. இது குறித்து கேட்க உதவி செயற்பொறியாளர் கிரி அவர்கள் முன்னுக்குப்பின் முரணாக பதிலளித்தார். எனவே இப்பணமும் உதவி பொறியாளர்களாலும் மற்றவர்களாலும் கிரிக்கு கொடுக்கப்பட்ட கையூட்டு பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. நீலநிற பையும் கைப்பற்றப்பட்டது. பின்னர் இவ்வலுவலக முன்புறம் நிறுத்தியிருந்த TN 39 AR 5923 என்ற பதிவு எண் உள்ள Maruthi 800 காரைப்பற்றி கேட்க அந்த கார் தான் ஒட்டி வந்த கார் என்று கிரி கூறினார். அந்த காரை தணிக்கை செய்ய காரின் பின் சீட் கவரில் ரூ. 13,650/- இருந்தது. இது குறித்து கேட்க முன்னுக்குப்பின் முரணாக கிரி பதிலளித்தார். எனவே இப்பணமும் உதவி பொறியாளர்களால் கிரிக்கு கொடுக்கப்பட்ட கையூட்டு பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. ஆக உதவி செயற்பொறியாளர் KR.கிரியிடமிருந்து தகுந்த முகாந்திரம் சொல்லாத மேற்படி பணம் ரூ.2,01,390/- ம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இப்பணம் குறித்து எதாவது பதிவேட்டில் குறிப்பிட்டு உள்ளீர்களா என்று உதவி செயற்பொறியாளர் கிரியிடம் கேட்க எதுவும் இல்லை என்று கூறினார். இந்த திடீர் தணிக்கை நடைபெற்று கொண்டிருக்கும் போது இவ்வலுவலக வணிக ஆய்வாளர் திரு M.சதாசிவம் என்பவர் பூஜை சாமான்களுடன் இவ்வலுகத்தினுள் சுமார் 16.00 மணிக்கு நுழைந்தார்.அவரை விசாரிக்க, அவர் தான் இவ்வலுவலகத்தில் கடந்த 25.06.2018 ல் இருந்து பணிபுரிந்து வருவதாக கூறினார். இவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய பணம் ரூ.600/- இருந்ததை தன்னுடைய4 சட்டையின் இடது பக்க பாக்கட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவரது இருக்கையின் வலது டிராயரில் பணம் ரூ.1,100/- இருந்தது. இந்த பணம் ரூ.1,700/- குறித்து கேட்க தன்னுடைய சொந்த பணம் என்று சதாசிவம் சொன்னதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக உதவி செயற்பொறியாளர் அறைக்கு அடுத்த அறையில் நுழைந்தபோது மதிப்பீட்டு அலுவலர் திரு.M.சௌந்தரபாண்டியன் வடக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய

சட்டையின் இடது மேல் பாக்கட்டில் இருந்து பணம் ரூ.1,340/- ஆஜர் செய்தார். அது அவரது சொந்த பணம் என்று சொன்னதால் அவரிடமே அப்பணம் ரூ.1,340/- திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் வணிக ஆய்வாளரிடம் இவ்வலுவலக பதிவேடுகளை பற்றி கேட்க அவர் தான் பராமரிக்கும் 1) Capital Proposal Register 2020-2021, 2) Capital Sanction Register 2020-2021, 3) Deposit Contribution Work (DCW) Proposal Register2020-2021, 4) Deposit Contribution Work (DCW) Sanction Register 2020-2021 5) Capital Agri SC Sanction Register from 2019 -2020, 6) Service Connection Labour (SCL) Register (Sanction) 2020-2021, 7) MBS Sanction Register (Meter Board Shifting) 2020 -2021, 8) Bus bar approval Register 2020-2021, 9) Load Reduction Register 2020-2021 ஆகியவற்றை ஆஜர் செய்தார். இதன் கடைசி இரு பக்கங்களின் ஜெராக்ஸ் நகல் ஒப்பம் செய்து கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக வணிக உதவியாளர் சித்தேஸ்வரியிடம் கேட்க அவர் தான் பராமரிக்கும் 1) அனுப்புகை பதிவேடு, 2) நடப்பு பதிவேடு, 3) பணி ஆணை உத்தரவு பதிவேடு (இரண்டு), 4) வருகை பதிவேடு மற்றும் 5) வீதப்பட்டி மாற்றப்பதிவேடு ஆகியவற்றை ஆஜர் செய்தார். இதன் கடைசி இரு பக்கங்களின் ஜெராக்ஸ் நகல் ஒப்பம் செய்து கைப்பற்றப்பட்டது. இது தவிர வேறு எந்த பதிவேடுகளும் பராமரிப்பதில்லை என்று உதவி செயற்பொறியாளர், வணிக ஆய்வாளர் மற்றும் வணிக உதவியாளர் கூறினார்கள். இந்த திடீர் தணிக்கையின்போது இவ்வலுவலக அலுவலர்கள் கண்ணியமாக நடத்தப்பட்டனர். பெண் அலுவலர் பெண் காவலரால் தனியாக அழைத்துச்செல்லப்பட்டு தணிக்கை செய்யப்பட்டனர். இந்த திடீர் தணிக்கை நடவடிக்கையானது இன்று 23.10.2020 ம் தேதி 15.15 மணிக்கு தொடங்கி 18.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கை நடவடிக்கையானது மடிக்கணினியில் தலைமைக்காவலர் S.வெங்கடேசன் என்பவரால் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீர் தணிக்கை நடவடிக்கையில் கீழ் கண்ட நபர்களால் கையெழுத்து செய்யப்பட்டது. ஒப்பம் xxxx திரு.C.தட்சிணாமூர்த்தி, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர், திரு.S.இரத்தினம், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். க. இரா.கிரி, உதவி செயற்பொறியாளர், கிராமியம், திருப்பூர். மா.சதாசிவம்,வணிக ஆய்வாளர், கிராமியம்/திருப்பூர் உபகோட்ட

அலுவலகம், பா.சீத்தேஸ்வரி, வணிக உதவியாளர், கிராமியம்/திருப்பூர் உபகோட்ட அலுவலகம், மு.சௌந்தரபாண்டியன், மதிப்பீட்டு அலுவலர், கிராமியம்/திருப்பூர் உபகோட்ட அலுவலகம், அ.மகேஸ்வரி தலைமை காவலர் North AWPS, TPR City, V.PANGAGAM, HC 745, North AWPS, Tiruppur City, K.CHITRA, WGr.I 306, North AWPS, Tiruppur City. S.வெங்கடேசன், தலைமை காவலர் 740, ஊ.த.க. பிரிவு, திருப்பூர். நான் மேற்கண்ட புகாரினையும் செயல் முறை நடவடிக்கைகளையும் மேற்கண்ட நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,01,390/-ஐயும், நீல நிற துணிப்பையையும் இன்று 24.10.2020-ம் தேதி 11.30 மணிக்கு பெற்று திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் நிலைய குற்ற எண்.5/2020/AC/TPR U/s 102 Cr.P.C r/w 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 கீழ் இன்று 11.45 மணிமுதல் 12.45 மணி வரை வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார், செயல் முறை நடவடிக்கை, பணம் ரூ.2,01,390/- மற்றும் நீல நிற துணிப்பை ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

Dy. Supdt of Police,
V&AC, Tiruppur.
24/10/2020